# யாழ்ப்பாணக் கல்லூரி - நிறுவன ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

வட இலங்கையின் யாழ்மாவட்டத்தில் வட்டுக்கோட்டை என்ற ஊரில் அமைந்துள்ள புகழ்பெற்ற தனியார் பாடசாலையாக யாழ்ப்பாணக் கல்லூரி விளங்குகின்றது. இக் கல்விநிறுவனம் அமெரிக்க கிறிஸ்தவ மறைப்பணியாளர்களால் 1823 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு வட்டுக்கோட்டை குருமடம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்க மிஷனால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நடத்திய இம்மதப்பள்ளி அங்கு சேர்க்கப்படும் மாணவர்களை கிறித்துவத்துக்கு மதம் மாற்றுவதையே முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும், பெரும்பாலான மாணவர்கள் தமது இந்து சமய நம்பிக்கையையே கடைப்பிடித்து வந்தனர். இதனால் 1855 ஆம் ஆண்டில் இம்மதப்பள்ளி மூடப்பட்டது. வட்டுக்கோட்டை குருமடத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களும், உள்ளூர் கிறித்தவர்களும் இப்பள்ளியை மீளத் திறக்க வேண்டும் எனக் கோரிக்கை தொடர்ந்து முன்வைத்ததன் பலனாக 1867 ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்டது. 1872 ஜூலை 3 இல் இக்கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெயர் மாற்றப்பட்டு மீளவும் பழைய கட்டடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரிய நிறுவனமாகச் செயல்படுகிறது.

இப் பாடசாலை யாழ் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட மிக தொன்மையான வரலாற்றைக் கொண்டு பல சவால்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட பாடசாலையாக காணப்படுகின்றது. குறிப்பாக இப் பாடசாலையின் ஆரம்பமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வளர்ச்சியையும், அவற்றுக்காக பாடுபட்ட ஆளுமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். எனவே, இச் செயற்றிட்டத்தின் மூலம் மிகவும் பழமை வாய்ந்த மற்றும் 201 ஆண்டு கால மிக நீண்ட வரலாற்றைக்கொண்ட இந்த பாடசாலையை ஆவணப்படுத்துவதும், இந்த பாடசாலையின் ஆவணங்களை பாதுகாப்பதும் மிக முக்கியமாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

வட இலங்கையின் யாழ்மாவட்டத்தில் புகழ்பெற்ற பாடசாலையாக யாழ்ப்பாணக் கல்லூரி திகழ்கின்றது. இச் செயற்றிட்டத்தின் மூலம் இப் பாடசாலை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தி, பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு கையளிக்கவும், யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்பான அனைத்து அம்சங்களையும் இணையத்தளத்தில் திறந்த வெளியில் இலவசமாக அனைவரும் பார்த்து பயனடைந்து கொள்ளச்செய்வதும் இவ் ஆவணப்படுத்தலின் முக்கிய நோக்கமாகும்.

## செயற்றிட்ட அடைவுகள்

யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்பான அனைத்து விடயங்களையும் கண்டறிந்து ஆவணப்படுத்துவதன் மூலம் பாடசாலையின் ஒட்டுமொத்த வரலாறும், பாடசாலையின் வரலாற்றோடு தொடர்புடைய ஆளுமைகளை அடையாளம் கண்டு அவர்களின் வாய்வழி வரலாறும் பதிவுசெய்யப்பட்டு ஆவணமாக்கி பாதுகாக்கப்படும். அத்தோடு, நூலக நிறுவனத்தினூடாக யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்பான பூரணமான விடயத்தை இணையத்தளம் மூலமாக பார்வையிடுவதற்கான அணுகல் வசதி அனைவருக்கும் இலவசமாக ஏற்படுத்திக்கு கொடுக்கப்படுவதோடு, அவை எதிர்கால சந்ததியிடம் பாதுகாப்பாக கொண்டு சேர்க்கப்படும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் பாடசாலை தொடர்பான வரலாறு, பாடசாலையால் ஆற்றப்பட்ட பணிகள் அப் பணிகளை இன்று வரை எடுத்துச் சென்று கொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள், மற்றும் பாடசாலையில் பணியாற்றியோரது வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**